செ.வெ.எண்:- 155

Dt:- 31.10.2011.

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை - 31.10.2011

மதுரை மாவட்டம், திருமங்கலம் நகர், குண்டாறு பாலத்தில் இன்று **(31.10.2011)** மதுரையிலிருந்து சிவகாசி நோக்கி சென்று கொண்டிருந்த அரசு பேருந்தும், எதிரே வந்த இரு சக்கர வாகனமும் மோதிக் கொண்டதில், இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்த திரு. சின்னக்கருப்பு என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும், அவரது மனைவி மற்றும் குழந்தை காயமடைந்தனர் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயருற்றேன்.

மேலும், பேருந்து, பாலத்தின் மேற்குப் பக்கம் கைப்பிடிச் சுவரை இடித்துக் கொண்டு **12** அடி ஆழத்தில் குண்டாற்றுக்குள் விழுந்ததில், பேருந்தில் பயணம் செய்த **35** பேர் காயமடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவருக்கும் நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மருத்துவமனை அதிகாரிகளுக்கும், மதுரை மாவட்ட நிருவாகத்திற்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். இச்சம்பவத்தில் காயமடைந்துள்ள அனைவரும் விரைவில் பூரண குணமடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. சின்னக்கருப்பு அவர்களின் குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா **15,000/-** ரூபாயும், சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா **6,000/-** ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்